11.11.2025 O.S 47/2023 பி.வா.சா1 முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா உறவுமுறை ஆகும். வழக்கு சொத்தானது பூர்வீக சொத்தாகும். ஆறுமுக நாடாரின் வாரிசுகள் யார் என்றால் மாடசாமி, மேகலிங்கம், வைரமுத்து, ராமசாமி, சித்திரைகணி ஆகியோர்கள் ஆவார்கள். நான் தாக்கல் செய்துள்ள ஏற்பாடு ஆவணத்திற்கு என் அப்பா பெயரில் பத்திரமோ, பட்டாவோ இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுக நாடார் பெயருக்கு மட்டும் தனி பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2018 ம்ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணமானது மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. 24.10.2018 ம் தேதியிட்ட ஆவணத்தை ரத்து செய்து விட்டோம் என்றால் சரிதான். மீண்டும் தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.77/2019 என வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றோம் என்றால் சரிதான். அந்த தீர்ப்பினை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது பொது சொத்து என்றும், தனிபட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதிகளுக்கு 6 ல் 4 பங்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.